(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(9).]

# பாராளுமன்றத்தின் 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2026 ஒக்தோபர் 12, திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 135/2026

கௌரவ சஜித் பிரேமதாச

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்

கௌரவ தாஹிர் மரைக்கார்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ சானக மாதுகொட

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ ஜகத் விதான

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ சட்டத்தரணி ஹபீப் றிபான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ அமில பிரசாத்

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ வருண லியனகே

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ மனோ கணேசன்,— கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை,— இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள், தனது பதவியின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் செயற்பட்ட மற்றும் செயற்படும் விதம் காரணமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம், 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பகிரங்க ஆதனத்திற்கெதிரான தவறுகள் சட்டம், இலங்கை தண்டனைச் சட்டக்கோவை, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம், 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைளும்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தினால் 2018 மார்ச் 07 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு, 2018 ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வர வேண்டுமென நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக்கோவை மற்றும் 2026 ஏப்ரல் 07 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட நிலையியற் கட்டளைகள் உள்ளிட்ட நாட்டில் செல்லுபடியாகும் மற்றும் நடைமுறையிலுள்ள ஏனைய சட்ட ஏற்பாடுகளை திட்டமிட்டும் தன்னிச்சையாகவும் மீறியுள்ளமையினாலும்;

(1) பாராளுமன்றச் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் தாபனவிதிக் கோவையின் I ஆம் தொகுதியின் XVIII ஆம் அத்தியாயத்தின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லமாகும் என்பதோடு, அவ்வாறானதொரு உத்தியோகபூர்வ இல்லம் உரித்தாகவுள்ள நிலையிலும், அவ்வுத்தியோகபூர்வ இல்லத்தை தற்போதைய கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் கடமை மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்ற நிலையிலும், அதற்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ இல்லங்கள் இல்லாத அமைச்சர்கள் அல்லது பிரதி அமைச்சர்கள் அல்லது அரசின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு நிவாரண வாடகை அடிப்படையில் வழங்கப்படும் கொழும்பு 04, லோரிஸ் வீதியில் அமைந்துள்ள பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்குச் சொந்தமான மாடிக்குடியிருப்புத் தொகுதியிலிருந்து உத்தியோகபூர்வ இல்லமொன்றை வழங்குமாறு சட்டவிரோதமான கோரிக்கையொன்றை விடுத்து, அதற்கமைய இலக்கம் 8-1 கொண்ட அரச உத்தியோகபூர்வ இல்லத்தை 2025 ஜனவரி மாதம் முதல் தனது பெயருக்கு ஒதுக்குவித்து பயன்படுத்தி வருகின்றமையின் மூலம் திட்டமிட்டும் தெரிந்தே தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளை மீறியுள்ளமையினாலும், இதன் மூலம் அரசாங்கச் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளமையினாலும், அவ்வாறு மீறியமை 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் "ஊழல்" எனும் குற்றத்தின் கீழ் வரும் குற்றமாகும் என்பதினாலும்;

(2) மேற்சொன்ன கொழும்பு 04, லோரிஸ் வீதியில் அமைந்துள்ள பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்குச் சொந்தமான மாடிக்குடியிருப்புத் தொகுதியிலுள்ள இலக்கம் 8-1 கொண்ட அரச உத்தியோகபூர்வ இல்லத்தைப் பயன்படுத்திக் கொண்டே, பத்தரமுல்ல, ரஜமல்வத்தையில் அமைந்துள்ள சபாநாயகர் உத்தியோகபூர்வ இல்லத்தின் பராமரிப்பிற்காக 08 பேரைக் கொண்ட தனிப்பட்ட ஊழியர் குழுவொன்றை நியமித்து, அவ்வூழியர் குழுவின் சம்பளம் மற்றும் படிகளுக்காக மாதமொன்றுக்கு ரூபா 760,000/- இற்கும் அதிகமான தொகையையும், அவ்வுத்தியோகபூர்வ இல்லத்திற்கான நீர், மின்சாரக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்பிற்குத் தேவையான ஏனைய பொருட்களுக்கான செலவுகளையும் பாராளுமன்றக் கணக்கிலிருந்து செலுத்துவதற்குத் தூண்டியமையின் மூலம் பாராளுமன்றத்திற்கு திட்டமிட்டு தெரிந்தே பாரிய நிதி இழப்பை ஏற்படுத்துவதற்குச் செயற்பட்டு வருகின்றமையினாலும்;

(3) மேலும், தனது பிரத்தியேக செயலாளரான சமீர பிரியஷங்க கால்லகே என்பவருக்கும் உத்தியோகபூர்வ இல்லங்கள் இல்லாத அமைச்சர்கள் அல்லது பிரதி அமைச்சர்கள் அல்லது அரசின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு நிவாரண வாடகை அடிப்படையில் வழங்கப்படும் கொழும்பு 04, லோரிஸ் வீதியிலுள்ள ஆடம்பர மாடிக்குடியிருப்புத் தொகுதியிலிருந்து இலக்கம் 4-3 கொண்ட உத்தியோகபூர்வ இல்லத்தை வழங்குவதற்காகத் தனிப்பட்ட ரீதியில் தலையிட்டமையின் ஊடாக அரசுக்கு நிதி இழப்பை ஏற்படுத்தி அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வதற்கு ஆதரவளித்து அதற்கு உடந்தையாக இருந்தமையினாலும்;

(4) பத்தரமுல்ல, ரஜமல்வத்தையில் அமைந்துள்ள சபாநாயகர் உத்தியோகபூர்வ இல்லத்திலுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்களான படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் மற்றும் துவாய்கள் உள்ளிட்ட ஏனைய உபகரணங்களை உரிய அனுமதியின்றி அவ்வுத்தியோகபூர்வ இல்ல வளாகத்திற்கு வெளியே கொண்டு செல்வதற்குச் செயற்பட்டமையின் மூலம் உரிய சுற்றறிக்கைகள் மற்றும் ஏற்பாடுகளை மீறி அட்டவணைப்படுத்தப்பட்ட அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்துள்ளமையினாலும்;

(5) பத்தரமுல்ல, ரஜமல்வத்தையில் அமைந்துள்ள சபாநாயகர் உத்தியோகபூர்வ இல்லம் எந்தவொரு உத்தியோகபூர்வ கடமை அல்லது தனிப்பட்ட தேவைக்காகவும் பயன்படுத்தப்படுவதில்லை என பாராளுமன்றப் பணியாளர் ஆலோசனைக் குழுவிற்கும், முழுப் பாராளுமன்றத்திற்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவித்துவிட்டு, அவ்வுத்தியோகபூர்வ இல்லத்தை சபாநாயகர் தவிசாளராகவுள்ள வகிக்கும் அரசியலமைப்புப் பேரவையின் கூட்டங்களுக்காகப் பயன்படுத்தி இலங்கை பாராளுமன்றத்தையும் முழுப் பொதுமக்களையும் தவறாக வழிநடத்துவதற்குச் செயற்பட்டு, தன் மீது வைக்கப்பட்ட பொதுநம்பிக்கையைச் சீர்குலைத்து நம்பிக்கைத் துரோகம் இழைத்துள்ளமையினாலும்;

(6) அத்துடன், கொழும்பு 04, லோரிஸ் வீதியில் அமைந்துள்ள பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்குச் சொந்தமான மாடிக்குடியிருப்புத் தொகுதியிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் போதே, பாராளுமன்றத்திற்குச் சொந்தமான பத்தரமுல்ல, ரஜமல்வத்தையிலுள்ள சபாநாயகர் உத்தியோகபூர்வ இல்லத்தை தனிப்பட்ட பகல் மற்றும் இரவு விருந்துகளுக்காகவும், தனது தனிப்பட்ட பாவனைக்காகவும் பயன்படுத்துவதற்குச் செயற்பட்டமையின் மூலம் கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் குற்றவியல் முறைகேடான பயன்பாடு மற்றும் குற்றவியல் நம்பிக்கைத் துரோகம் இழைத்துள்ளமையினாலும்;

(7) கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களால் பத்தரமுல்லை, இராஜமல்வத்தையில் அமைந்துள்ள சபாநாயகர் உத்தியோகபூர்வ இல்லத்தின் படுக்கை விரிப்புகள், துவாய்கள், தலையணை உறைகள் உள்ளிட்ட பொருட்கள் அனுமதியின்றி வெளியே கொண்டு செல்லப்பட்டுள்ளதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக இலஞ்ச அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் புலனாய்வொன்று முன்னெடுக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில், குறித்த உத்தியோகபூர்வ இல்லத்தின் படுக்கை விரிப்புகள், துவாய்கள், தலையணை உறைகள் போன்ற பொருட்கள் தொடர்பாகப் பேணப்பட்டு வந்த பொருட்கள் பதவிவேட்டு ஆவணம் காணாமல் போயுள்ளதாக அந்த உத்தியோகபூர்வ இல்லத்துக்கு பொறுப்பாகவிருந்த ஊழியர் அறிவித்துள்ளாரெனவும், அவ்வில்ல ஊழியர் கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களால் நியமிக்கப்பட்ட பிரத்தியேக பணியாட்டொகுதியின் ஊழியரொருவர் என்பதனாலும், 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் பிரகாரம் அச்சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் புலனாய்வொன்றிற்குத் தொடர்புடைய ஏதேனுமொரு ஆவணத்தை மறைத்தல், அழித்தல் அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது அனுமதித்தல் அல்லது அதற்கு உதவி, அனுசரணை புரிதல் என்பது நீதவானொருவர் முன்னிலையில் முன்னெடுக்கப்படும் சுருக்கமுறையான வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் ஒரு மில்லியன் ரூபாய்க்கு மிகைப்படாத தண்டப்பணம் அல்லது 07 ஆண்டுகளுக்கு மிகைப்படாத காலப்பகுதிக்கான சிறைத்தண்டனை அல்லது அத்தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டு தண்டனைகளுமே விதிக்கப்படக்கூடிய குற்றமொன்றாக அமைவதனாலும், கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களால் இக்குற்றம் முதல்தோற்ற நிலையில் புரியப்பட்டுள்ளது என்ற நியாயமான சந்தேகம் எழுகின்றமையினாலும்;

(8) 2025.03.21 ஆம் திகதிய பாராளுமன்றப் பணியாட்டொகுதி ஆலோசனைக் குழுவினால் சனாதிபதியின் செயலாளரின் PS/CSA/00/1/4/12 இலக்கத்தைக் கொண்ட 2025.01.21 ஆம் திகதிய சுற்றறிக்கையின்படி கௌரவ சபாநாயகருக்கு அமைச்சரவை அமைச்சரொருவருக்குச் சமமான வாகன மற்றும் எரிபொருள் படிகளைப் பெற வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 14/2025 இலக்க 2025.05.07 ஆம் திகதிய நிர்வாகச் சுற்றறிக்கையின்படி 2025.05.02 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கௌரவ சபாநாயகரின் பாவனைக்காக அதிகபட்சமாக இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்களும், அவ்வாகனங்களுக்காக அதிகபட்சமாக 900 லீட்டர் எரிபொருளும் வழங்கப்பட வேண்டும். எனினும், கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் தனது பதவியின் அதிகாரங்களைப் பயன்படுத்தி பாராளுமன்ற ஊழியர்களுக்கு தகாத அழுத்தங்களைப் பிரயோகித்து, தனக்கு உத்தியோகபூர்வமாக உரித்தான இரண்டு வாகனங்களுக்கும் மேலதிகமாக, பாராளுமன்றத்திற்குச் சொந்தமான WP NC 4923 கொண்ட வேன் வண்டி உட்பட பாராளுமன்றத்திற்குச் சொந்தமான மேலும் சில வாகனங்களைத் தனது தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்தி வருவதுடன், மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் படிகளுக்கு மேலதிகமாக அவ்வாகனங்களுக்கும் எரிபொருளைப் பெற்றுக்கொண்டுள்ளமையினாலும்;

(9) முன்னர் முன்னாள் கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களுக்கு அமைச்சரவையினால் அவரது பதவிக் காலத்திற்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் ஊடகப் பிரிவொன்றை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், அவரது பதவிக் காலம் நிறைவடைந்தவுடன் அவ்வனுமதி நிறைவடைந்திருந்த போதிலும், எவ்வித அனுமதியுமின்றி தற்போதைய கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களினால் சபாநாயகர் ஊடகப் பிரிவு எனும் பெயரில் சட்டவிரோதப் பிரிவொன்றை நடத்திச் சென்று, அப்பிரிவிற்காக பாராளுமன்றத்தின் தொடர்பாடல் பிரிவிற்குச் சொந்தமான உபகரணங்களை சட்டவிரோதமாகப் பெற்று, அவ்வாகனங்கள் மற்றும் உபகரணங்களை பாராளுமன்றத்தின் செலவில் பராமரித்து, திட்டமிட்டும் தெரிந்தே குற்றவியல் முறைகேடான பயன்பாட்டையும் அரசுக்கு நிதி இழப்பையும் ஏற்படுத்தி வருகின்றமையினாலும்;

(10) மேலே (9) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதியற்ற சபாநாயகர் ஊடகப் பிரிவிற்கு கடந்த காலத்திற்கும் செல்லுபடியாகும் வகையில் சட்டபூர்வ தன்மையைப் பெற்றுக்கொள்வதற்காக துர்நோக்கத்துடன் செயற்பட்டு, பாராளுமன்றப் பணியாட்டொகுதி ஆலோசனைக் குழுவையும் தவறாக வழிநடத்தி, அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக கௌரவ பிரதம அமைச்சரின் ஊடாக அமைச்சரவைக்கும், நிதியமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கும் மற்றும் சனாதிபதியின் செயலாளருக்கும் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்த போதிலும், அவ்வனைத்து நபர்களும் நிறுவனங்களும் அதற்கான அனுமதியை வழங்கவில்லை என்பதை அறிந்திருந்தும், மேலும் சட்டவிரோதமான முறையிலும் அநீதியாகவும் பாராளுமன்றத்திற்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் உபகரணங்களை அச்சட்டவிரோத சபாநாயகர் ஊடகப் பிரிவின் பாவனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றமையினாலும்;

(11) இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகருக்கு மதிய உணவைப் பெற்றுக் கொள்வதற்கான வசதி பாராளுமன்றத்தின் இரண்டாவது மாடியில் கௌரவ சபாநாயகருக்காக ஒதுக்கப்பட்ட மதிய உணவு அருந்தும் அறையில் செய்யப்பட்டுள்ளதுடன், சபாநாயகரின் தனிப்பட்ட செயலாளருக்கு உணவு அருந்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது நிறைவேற்று அதிகாரிகளின் உணவகமாகும். அத்துடன் அந்தந்த உணவகங்களின் வசதிகளைப் அனுபவிப்பதற்காக பாராளுமன்றத்தினால் அறவிடப்படும் தொகையும் வெவ்வேறானதாகும். நிலைமை இவ்வாறிருக்க, தற்போதைய கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் தனது தனிப்பட்ட செயலாளர் திரு. சமீர பிரியஷங்க கால்லகே என்பவருடன் சபாநாயகரின் தனிப்பட்ட உணவகத்தில் மதிய உணவைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தமையினால், சபாநாயகரின் விருந்தினர் ஒருவருக்காக அறவிடப்படும் தொகையை சபாநாயகர் செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதனைச் செலுத்தாமல் அம்மதிய உணவு வசதிகளைப் பெற்றுக்கொண்டமையின் மூலம் இலங்கை பாராளுமன்றத்திற்கு நிதி ரீதியான இழப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளமையினாலும்;

(12) பாராளுமன்றத்தின் உள்ளகக் குழுக்கூட்டங்கள் மற்றும் ஏனைய விசேட குழுக்கூட்டங்களில் பங்கேற்பதற்கு அதற்காக அதிகாரமளிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியின் அலுவலர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட அரச அலுவலர்களுக்கு மாத்திரமே அனுமதியுள்ளது. எனினும், கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களின் பிரத்தியேக செயலாளர் திரு. சமீர பிரியஷங்க கால்லகே என்பவருக்கு பாராளுமன்றத்தின் செயற்பாடுகளைத் தீர்மானிக்கும் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் "பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு", பாராளுமன்றப் பணியாளர்களின் அலுவல்கள் பற்றி ஆராயப்படும் "பாராளுமன்றப் பணியாட்டொகுதி ஆலோசனைக் குழு" உள்ளிட்ட குழுக்கள் மற்றும் குழுக் கூட்டங்கள் அனைத்திலும் எவ்வித உரிய அனுமதியோ அதிகாரமோ இன்றி பங்கேற்பதற்கு உடந்தையாகச் செயற்பட்டமையின் மூலம் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் மற்றும் மரபுகளை திட்டமிட்டும் தன்னிச்சையாகவும் மீறியுள்ளமையினாலும்;

(13) 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களினால் சபாநாயகரின் தனிப்பட்ட பணியாட்டொகுதியினர், அவரது ஊடகப் பிரிவு மற்றும் அப்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள பொருட்கள், அவர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் மற்றும் அவர்கள் பயன்படுத்தும் உத்தியோகபூர்வ வாகனங்கள் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல் கோரிக்கைகள் தொடர்பில் 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் கீழ் உள்ள ஏற்பாடுகளை துஷ்பிரயோகம் செய்து, தற்போதைய கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களினாலும் அவரது அறிவுறுத்தலின் பேரில் அவரது பிரத்தியேக செயலாளர் திரு. சமீர பிரியஷங்க கால்லகே அவர்களினாலும் மேலே குறிப்பிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக அத்தகவல்களை வழங்க வேண்டாமென பாராளுமன்ற தகவல் அலுவலர்களுக்கு எழுத்துபூர்வமாக உத்தரவிட்டமையின் மூலம் அத்தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ளமையினாலும்;

(14) மேலே (13) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பட்டமையினால் கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் தான் செய்து வரும் அரச பணத் துஷ்பிரயோகம் மற்றும் அரசுக்கு நிதி இழப்புகளை ஏற்படுத்திச் செய்யும் செயற்பாடுகள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது வெளிப்படுவதைத் தடுப்பதற்குச் செயற்பட்டமையின் மூலம் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் "ஊழல்" எனும் குற்றத்தைப் புரிந்துள்ளமையினாலும்;

(15) பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமாகப் பணியாற்றிய திரு. ஜீ.கே.ஏ. சமிந்த குமார குலரத்ன அவர்கள் தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொள்வதற்குத் தனக்கு இல்லாத அதிகாரத்தை உரித்தாக்கிக் கொண்டு, பொது நிர்வாக மற்றும் நிதி அமைச்சுகளின் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாகச் சட்டவிரோதமான முறையில் விசாரணை அதிகாரியொருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்து, அவ்விசாரணை அதிகாரிக்கு அநீதியான முறையில் ரூபா 274,975/- தொகையை 2025.11.17 ஆம் திகதிய பாராளுமன்ற இலங்கை வங்கி கிளையினால் வழங்கப்பட்ட 293566 ஆம் இலக்கக் காசோலை மூலம் பாராளுமன்றக் கணக்கிலிருந்து செலுத்துவதற்குத் தூண்டியமையினாலும், அதற்கு மேலதிகமாக அச்சட்டவிரோத விசாரணை அதிகாரிக்கு பாராளுமன்றக் கணக்கிலிருந்து உணவு மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குமாறு அறிவுறுத்தியமையினாலும், இலங்கை பாராளுமன்றக் கணக்கிலிருந்து அவ்வேற்பாடுகளைச் செலவிடச் செய்தமையின் காரணமாக கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் பாராளுமன்றத்திற்குச் சொந்தமான அரச பணத்தைக் குற்றவியல் முறையில் பயன்படுத்தியதன் மூலம் அரசுக்கு நிதி இழப்பை ஏற்படுத்தியுள்ளமையினாலும்;

(16) இலங்கை பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி மற்றும் இணைக்கப்பட்ட பணியாட்டொகுதிகளுக்கு நீண்டகாலமாக வழங்கப்பட்டு வந்த ஊக்குவிப்புப் படிகள் மற்றும் வசதிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தமையின் மூலம் பாராளுமன்றப் பணியாளர்கள் மத்தியில் தமது வேலை தொடர்பான திருப்தியற்ற தன்மையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க இடமளித்தமையினாலும், கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் பாராளுமன்றப் பணியாளர்கள் சபாநாயகர் பதவி மீது வைத்திருந்த நம்பிக்கை மற்றும் கௌரவத்தைச் சீர்குலைத்துள்ளமையினாலும்;

(17) கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களின் பிரத்தியேக பணியாளர்களினால் விடுக்கப்படும் சட்டவிரோதமான கோரிக்கைகளுக்கு இடமளிக்காத பாராளுமன்றப் பணியாளர்களை இடமாற்றம் செய்வதற்கும், அவர்களை அழைத்து கண்டிப்பதற்கும் செயற்பட்டமையின் ஊடாக பாராளுமன்றத்தின் உள்ளக நிர்வாகத்தில் சட்டவிரோதமாக தலையிட்டு, சபாநாயகரும் அவரது பிரத்தியேக செயலாளர் திரு. சமீர பிரியஷங்க கால்லகே என்பவரும் "தனக்கில்லாத அதிகாரத்தை உரித்தாக்கிக் கொண்டு செயற்படுதல்" (ultra vires) எனும் மீறலைப் புரிந்தமையின் மூலம் இயற்கை நீதிக் கோட்பாடுகளைத் திட்டமிட்டும் தன்னிச்சையாகவும் மீறியுள்ளமையினாலும்;

(18) பாராளுமன்றப் பணியாளர்களை மறுசீரமைப்பதற்காக அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கு பாராளுமன்றப் பணியாளர் ஆலோசனைக் குழுவின் அறிவுறுத்தலின்படி முன்னர் குழுவொன்று நியமிக்கப்பட்டு, அதற்காக சுமார் 20 இலட்சம் ரூபா பணம் செலவிடப்பட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போதைய கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் அவ்வறிக்கை போதுமானதாக இல்லை என்றும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் காரணங்களைக் கூறி தன்னிச்சையாக அறிவித்து, பணியாளர்களை மறுசீரமைப்பதற்காக புதிய அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கு ஓய்வுபெற்ற அதிகாரிகள் மூவரைக் கொண்ட மூவர் குழுவொன்றை நியமித்து, புதிய மூவர் குழுவின் அறிக்கைக்காக பாராளுமன்றக் கணக்கிலிருந்து ரூபா 3,262,477.42/- (முப்பத்திரண்டு இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து நானூற்று எழுபத்தேழு ரூபா நாற்பத்திரண்டு சதங்கள்) தொகையைச் செலவிட நடவடிக்கை எடுத்து, பாராளுமன்றக் கணக்கிற்கு திட்டமிட்டும் தெரிந்தே இழப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமையினாலும்;

(19) மேலே குறிப்பிடப்பட்ட சட்டவிரோத மற்றும் ஊழல் செயல்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் AC/0356/2026 B - 206 ஆம் இலக்கத்தின் கீழ் புலனாய்வொன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அவ்விசாரணை தொடர்பாக இதுவரையில் இப்பாராளுமன்றத்தில் பணியாற்றும் அலுவலர்களினால் வாக்குமூலங்களும் ஆவணங்களும் சாட்சியங்களாக வழங்கப்பட்டுள்ளதுடன், இனிவரும் காலங்களிலும் மேலதிகமாக அவ்விசாரணை தொடர்பாக பாராளுமன்றத்தில் பணியாற்றும் அலுவலர்களிடமிருந்து வாக்குமூலங்களும் சாட்சியங்களும் பெறப்படவிருப்பதனால், (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் இப்பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவியை வகிப்பது அவ்விசாரணையை நடுநிலையாக, செல்வாக்குகளின்றி மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுப்பதற்குத் தடையாக அமையும் என்பதினாலும்;

(20) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மேலே (19) இல் குறிப்பிடப்பட்டுள்ள புலனாய்வு முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் அவரது பிரத்தியேக செயலாளர் திரு. சமீர பிரியஷங்க கால்லகே அவர்கள் அப்புலனாய்வில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடமிருந்து அறிக்கையொன்றை கோருவதற்கு நடவடிக்கை எடுத்தமையினால், 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் விசாரணைகளில் தலையீடு செய்தல் மற்றும் செல்வாக்குச் செலுத்துதல் மற்றும்/அல்லது அதற்கு உடந்தையாக இருத்தல் எனும் குற்றத்தைப் புரிந்துள்ளமையினாலும்; அத்துடன் அது தொடர்பாகவும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா அவர்களினால் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அம்முறைப்பாடு தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் AC/0695/2026 எனும் இலக்கத்தின் கீழ் புலனாய்வொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினாலும்;

(21) எனவே, பாராளுமன்றத்தின் தலைவராகச் செயற்படும் கௌரவ சபாநாயகரின் கீழ் பணியாற்றும் அலுவலர்கள் அவர் தொடர்பாக சாட்சியங்களையும் தகவல்களையும் வழங்கும் போது நடுநிலையாகவும் சுதந்திரமாகவும் செயற்பட முடியுமா என்பது குறித்து நியாயமான சந்தேகம் எழக்கூடும் என்பதனாலும், கௌரவ சபாநாயகர் அல்லது அவரது பிரத்தியேக பணியாளர்களின் அலுவலர்களிடமிருந்து அத்தொடர்புடைய புலனாய்விற்காகத் தகவல்கள் அல்லது சாட்சியங்களை வழங்கும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியின் அலுவலர்களுக்கு அழுத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்பு உள்ளமையினாலும்;

(22) இதற்கமைய ஏற்கனவே கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களினதும் அவரது பிரத்தியேக செயலாளரினதும் சட்டவிரோத தலையீடுகள் இப்புலனாய்விற்காக இடம்பெற்று வருவதாகத் தெளிவான சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையினால், கௌரவ சபாநாயகர் அல்லது அவரது பிரத்தியேக பணியாட்டொகுதி அலுவலர்களினால் இப்புலனாய்வு தொடர்பாகச் சாட்சியமளிக்கும் நிர்வாகப் பிரிவு, நிதிப் பிரிவு மற்றும் போக்குவரத்துப் பிரிவு அலுவலர்களை சபாநாயகர் அலுவலகத்திற்கு அழைப்பதும், தொலைபேசி வாயிலாக அவர்களுக்கு இப்புலனாய்வு தொடர்பாக பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகிப்பதும் இடம்பெறுவதாக அறியப்பட்டுள்ளமையினாலும்;

(23) ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 3(4) மற்றும் 3(5) பிரிவுகளுக்கமைய ஆணைக்குழுவின் அதிகாரங்கள் அல்லது கடமைகளை நடைமுறைப்படுத்துவதில் அல்லது நிறைவேற்றுவதில் தலையிடுவது அல்லது தலையிட எத்தனிப்பது பாரதூரமான குற்றமாகும் என்பதனாலும், தன் மீது புலனாய்வொன்று இடம்பெறும் சந்தர்ப்பத்திலும், அப்புலனாய்விற்குத் தேவையான தகவல்களையும் சாட்சியங்களையும் வழங்கும் அலுவலர்கள் தனக்குக் கீழ் பணியாற்றும் சந்தர்ப்பத்திலும், அதேபோன்று அவ் அலுவலர்களுக்குச் சாட்சியங்கள் தொடர்பாக நேரடி அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதற்கான சான்றுகள் உள்ள சந்தர்ப்பத்திலும் தற்போதைய கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் தொடர்ந்து உயரிய பாராளுமன்றத்தின் தலைவராக சபாநாயகர் பதவியை வகிப்பதற்குச் சட்டபூர்வமாகவோ அல்லது ஒழுக்கநெறி ரீதியாகவோ உரிமையில்லை என்பதினாலும்;

(24) சபாநாயகருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் புலனாய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் வாயிலாகப் பிரசாரப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அப்புலனாய்விற்குரிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக 2026 பெப்ரவரி 23 ஆம் திகதி அல்லது 2026 பெப்ரவரி 24 ஆம் திகதி "சிரச" ஊடக நிறுவனத்தினால் ஒளிபரப்பப்பட்ட "One to One" மற்றும் "தவச - Today" ஆகிய நிகழ்ச்சிகளில் பங்கேற்று, தன் மீது சுமத்தப்பட்டுள்ள வாகனத் துஷ்பிரயோகம், எரிபொருள் துஷ்பிரயோகம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லத் துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக நேரடியாகக் கலந்துரையாடி அப்புலனாய்விற்குச் செல்வாக்குச் செலுத்த முயற்சித்துள்ளமையினாலும், மேலும் அவ்நேர்காணல்களைப் பதிவு செய்வதற்காக பாராளுமன்ற வளாகம், பாராளுமன்றத்தின் தளபாடங்கள் உள்ளிட்ட உபகரணங்கள் மற்றும் பாராளுமன்ற ஊடகப் பிரிவிற்குச் சொந்தமான கெமரா உபகரணங்களைப் பயன்படுத்தியமையின் மூலம் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் "ஊழல்" எனும் குற்றம் நிரூபணமாகும் வகையில் செயற்பட்டுள்ளமையினாலும்;

(25) 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 162 ஆம் பிரிவின் கீழ் உள்ள "பகிரங்க உத்தியோகத்தர்" எனும் வரைவிலக்கணத்திற்குள் சபாநாயகரும் அடங்குவதுடன், அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுத்தலும் ஒழித்தலும், நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தல், நிர்வாகத்தின் நேர்மையை வலுப்படுத்தல், பொறுப்புக்கூறலை அதிகரித்தல், அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புதல் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான பொதுமக்களின் பங்களிப்பை வலுப்படுத்தல் என்பன அடங்குகின்றன என்பதினாலும், சட்டத்தின் 3(4) பிரிவின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவானது தனது அதிகாரங்களையும் கடமைகளையும் நடைமுறைப்படுத்தும் போது ஆணைக்குழு தொடர்பாகக் கட்டளைகளைப் பிறப்பிக்க அல்லது மேற்பார்வை செய்ய சட்டத்தின் கீழ் உரித்துடைய நீதிமன்றம் அல்லது நியாயசபையொன்றைத் தவிர வேறு எந்தவொரு நபராலும் பிறப்பிக்கப்படும் எந்தவொரு கட்டளையோ அல்லது வேறு எந்தவொரு தலையீடோ இன்றி தனது அதிகாரங்களையும் கடமைகளையும் நடைமுறைப்படுத்தவும், புரியவும் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையினால், கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் நாட்டின் உயரிய நிறுவனமான பாராளுமன்றத்தின் தலைமைத்துவத்தை வகிப்பது சட்டபூர்வமாகவும் ஒழுக்கநெறி ரீதியாகவும் பொருத்தமற்றது என்பதினாலும்;

(26) 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 107(1) மற்றும் 107(2) பிரிவுகளுக்கமைய, பகிரங்க உத்தியோகத்தரொருவர் பகிரங்க அதிகாரசபையொன்று அல்லது அவ்வதிகாரசபையினால் எடுக்கப்படும் தீர்மானமொன்று தொடர்பாக நேரடி அல்லது மறைமுகத் தொடர்புள்ள/ செல்வாக்குள்ள சந்தர்ப்பத்தில் அவ்வரச ஊழியர் அத்தீர்மானத்திற்குரிய பகிரங்க அதிகாரசபையின் எந்தவொரு நடவடிக்கையிலும் வாக்களிப்பதோ அல்லது அந்நடவடிக்கையில் பங்கேற்பதோ கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், நிலைமை இவ்வாறிருக்க இப்பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புச் சட்டத்திற்கான திருத்தம் 2026 ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி கௌரவ பிரதமரினால் முதலாம் முறை வாசிக்கப்பட்டதுடன், அச்சந்தர்ப்பத்தில் கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் பாராளுமன்றத்தின் தலைமை ஆசனத்தில் அமர்ந்திருந்தமையின் மூலம் மேலே குறிப்பிடப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 107 ஆம் பிரிவை மீறியுள்ளமையினாலும்;

(27) ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் அத்திருத்தம் தொடர்பான பாராளுமன்ற விவாதம் 2026 ஒக்தோபர் மாதம் 08 ஆந் திகதி நடாத்துவதற்கு ஒழுங்குப் பத்திரத்தில் இடப்பட்டு, அதற்கமைய இப்பாராளுமன்றத்தின் முன் விவாதிக்கும் சந்தர்ப்பத்தில் மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் திருத்தம் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையிலும் அச்சட்டத்தின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய தற்போதைய கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களால் பங்கேற்க முடியாது என்பதனாலும்;

(28) இலஞ்ச அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் தனக்கெதிராகப் புலனாய்வொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதை அறிந்திருந்தும், 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்திற்காக 2026 ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு அறிவிப்பை கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் 2026 செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குத் தாமே சமர்ப்பித்ததன் காரணமாக, அதே ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 107 ஆம் பிரிவை மீறி, மேல்நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் ஒரு மில்லியன் ரூபாய்க்கு மிகைப்படாத தண்டப்பணம் அல்லது 07 ஆண்டுகளுக்கு மிகைப்படாத காலப்பகுதிக்கான கடுழிய சிறைத்தண்டனை அல்லது அத்தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டு தண்டனைகளுமே விதிக்கப்படக்கூடிய குற்றமொன்றைப் புரிந்துள்ளமையினாலும்;

(29) மேலும், அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு சட்டமூலத்திலும் சபாநாயகர் தனது கையொப்பத்துடன் சான்றிதழொன்றைக் குறித்துக் கொள்ள வேண்டும் என்பதனால், இவ்வூழல் எதிர்ப்புச் சட்டத்தின் திருத்தம் இப்பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் தற்போதைய கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களுக்கு ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 107 ஆம் பிரிவின்படி அச்சான்றிதழைக் குறித்துக் கொள்ள முடியாது என்பதினாலும்;

(30) அத்துடன், 2026.09.08 ஆம் திகதி இப்பாராளுமன்றத்தின் பொது அலுவல்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் கௌரவ சபாநாயகரினால் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 31(1)(ஆ) பிரிவிற்கமைய, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு, நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் 2027 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு சபையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், தான் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வொன்று முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆணைக்குழு தொடர்பான எந்தவொரு விடயத்திலும் அவர் சம்பந்தப்பட முடியாது என மேலே குறிப்பிடப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 107 ஆம் பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், ஆணைக்குழுவின் நிதி விவகாரங்கள் தொடர்பாக நேரடித் தலையீட்டை மேற்கொண்டு சபாநாயகரினால் திட்டமிட்டும் தெரிந்தே ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் அப்பிரிவு மீறப்பட்டுள்ளமையினாலும்;

(31) அரசியலமைப்பின் 41அ(2) உறுப்புரையின்படி கௌரவ சபாநாயகர் பதவி வழியாக அரசியலமைப்புப் பேரவையின் தவிசாளராவார் என்பதுடன், அரசியலமைப்பின் 41ஆ உறுப்புரையின் அட்டவணை மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளரையும் உறுப்பினர்களையும் நியமிப்பதற்காக சனாதிபதிக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதும் அரசியலமைப்புப் பேரவையின் பணியாகும் என்பதினாலும்; ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்படி பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்படுவதும் அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரையின் பேரில் சனாதிபதியினால் என்பதனாலும், தான் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் புலனாய்வொன்று முன்னெடுக்கப்படும் இச்சந்தர்ப்பத்தில் தற்போதைய கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களுக்கு சபாநாயகர் என்ற ரீதியில் சட்டபூர்வமாகவும் ஒழுக்கநெறி ரீதியாகவும் அரசியலமைப்புப் பேரவையின் தவிசாளர் பதவியை வகிக்க முடியாது என்பதினாலும்;

(32) எதிர்காலத்தில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஆணையாளர் பதவியொன்றில் வெற்றிடமொன்று ஏற்படவிருப்பதுடன், அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக சனாதிபதிக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க வேண்டியது சபாநாயகர் தலைமை தாங்கும் அரசியலமைப்புப் பேரவையினாலாகும் என்பதினாலும், மேலும் யாதேனுமொரு சந்தர்ப்பத்தில் அரசியலமைப்புப் பேரவையினால் பரிந்துரைக்கப்படும் வேட்புமனு தொடர்பாக வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டால் அதன் தவிசாளர் என்ற ரீதியில் "அறுதியிடும் வாக்கு" சபாநாயகருக்கு உரித்தாகும் என்பதினாலும், அதற்கமைய தன் தொடர்பாகப் புலனாய்வொன்று நிலுவையிலுள்ள சந்தர்ப்பத்தில் அப்புலனாய்வு தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் நிறுவனத்தின் உறுப்பினரொருவரை நியமிக்கும் செயற்பாட்டில் பங்களிப்புச் செய்வது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 107 ஆம் பிரிவிற்கமைய செய்யக்கூடாத பாரதூரமான குற்றமாவதுடன், அது நிறுவன அக்கறை முரண்பாடாகவும் நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மை மீதான பொதுமக்களின் நம்பிக்கை தொடர்பில் பாரதூரமான பிரச்சினையாகவும் அமையும் என்பதினாலும்;

(33) அரசியலமைப்பின் 41இ உறுப்புரைக்கான அட்டவணையின் Iஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதம நீதியரசர் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளையும், மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரையும் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளையும் நியமிப்பதற்காக சனாதிபதியினால் செய்யப்படும் பரிந்துரைகளை அங்கீகரிப்பது சபாநாயகர் தலைமை தாங்கும் அரசியலமைப்புப் பேரவையின் உத்தியோகபூர்வ பணியாகும் என்பதினாலும், ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 160(1) பிரிவின் கீழ் யாதேனுமொரு நபர் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமொன்று குறித்து திருப்தியடையவில்லையாயின் அது தொடர்பாக நிவாரணம் கோரி ஆணைக்குழுவிற்கு எதிராக உரிய விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டியது உயர்நீதிமன்றத்திலேயே என்பதினாலும், அதற்கமைய இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தான் தொடர்பாகச் செய்யப்படும் புலனாய்வின் முடிவு குறித்து ஒருவேளை சபாநாயகரினால் திருப்தியடைய முடியாவிட்டால் அது தொடர்பாக நிவாரணம் கோரிச் செல்ல வேண்டியது உயர்நீதிமன்றத்திற்கு என்பதினாலும், தான் தலைமை தாங்கும் அரசியலமைப்புப் பேரரைவயினால் நியமனம் அங்கீகரிக்கப்படும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் நிவாரணம் கோரி மனுவொன்றைச் சமர்ப்பிக்க நேரிட்டால் அது அக்கறை முரண்பாடாகவும் (conflict of interest) பாரதூரமான ஒழுக்கநெறிப் பிரச்சினையாகவும், நடுநிலைமை மற்றும் வெளிப்படைத்தன்மை மீதான பொதுமக்களின் நம்பிக்கையைச் சீர்குலைப்பதாகவும் அமையும் என்பதினாலும்;

(34) 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தினால் 2018 மார்ச் 07 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு, 2018 ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வர வேண்டுமென நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக்கோவையின் 7(ஆ) பிரிவின்படி,

> *"உறுப்பினர் எவரும் தனது அலுவலகக் கடமைகளை நிறைவேற்றுவதில் அத்தகைய உறுப்பினரின் செல்வாக்கு செலுத்தக்கூடியதான ஏதேனும் வெளியே உள்ள தனியாள் அல்லது ஒழுங்கமைப்பிற்கு ஏதேனும் நிதிசார் அல்லது கடப்பாடுகளின் கீழ் தாமே ஏதேனும் வழியமைத்துக் கொடுத்தலாகாது"*

எனக் காட்டப்பட்டுள்ளதுடன் குறித்த நடத்தைக் கோவையின் 19 வது பிரிவுக்கு அமைவாக,

> *"எவரேனும் உறுப்பினர் பாராளுமன்றத்தினால் அல்லது அதன் ஏதேனும் குழுவினால் கருத்திற்கெடுக்கப்படும் ஏதேனும் விடயம் தொடர்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் தனிப்பட்ட அல்லது பண ரீதியான அக்கறையைக் கொண்டுள்ளபோது அத்தகைய உறுப்பினர் பதிவேட்டில் அத்தகைய அக்கறை பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிப்படுத்துதல் வேண்டும். அத்துடன் அவர் இப்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய பிரகடனத்தை செய்தாலொழிய சபையில் அல்லது குழுவில் இடம்பெறும் ஏதேனும் விவாதத்தில் பங்குபற்றுதல் ஆகாது"*

என்று குறிப்பிடப்பட்டுள்ளமையினாலும், அதற்கமைய "பாராளுமன்ற உறுப்பினர்" என்பதற்குள் சபாநாயகரும் அடங்குவார் என்பதினாலும், அவருக்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அல்லது 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்துடன் தொடர்புடைய எந்தவொரு நடவடிக்கையிலும் பங்களிப்பு வழங்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக்கோவையின்படி சட்டப்பூர்வமாகவும் ஒழுக்கநெறி ரீதியாகவும் உரிமை இல்லை என்பதனால், கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் இவ்வுயரிய பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவியை தொடர்ந்து வகிப்பது சட்டபூர்வமானதோ ஒழுக்கநெறிக்கு உட்பட்டதோ ஆகாது என்பதினாலும்;

(35) மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக்கோவையின் மேற்கூறப்பட்ட பிரிவுகளுக்கமைய விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவராக இருக்கும் அதேவேளையில் அரசியலமைப்புப் பேரவையின் தவிசாளராக உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது தொடர்பான எந்தவொரு நடவடிக்கையிலும் சம்பந்தப்படுவதற்கு கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களுக்குச் சட்டபூர்வமான மற்றும் ஒழுக்கநெறி ரீதியான உரிமை இல்லை என்பதினாலும்;

(36) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக்கோவையின்படி எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் தான் தொடர்பில் அக்கறை முரண்பாடு ஏற்படும் வகையிலான நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது என உள்ள நிலையில், தான் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் புலனாய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அறிந்திருந்தும், அவ்வாணைக்குழுவினால் பாராளுமன்றத்தின் பொறுப்பிலுள்ள "சிராவஸ்தி மாளிகை" தனது பாவனைக்குக் கோரப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், அக்கோரிக்கை தொடர்பாகத் தீர்மானம் எடுத்த பாராளுமன்றப் பணியாட்டொகுதி ஆலோசனைக் குழுவில் அதற்காகத் தலையிட்டமையின் மூலம் அக்கறை முரண்பாடு ஏற்படும் வகையில் செயற்பட்டுள்ளமையினால், கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக்கோவையைத் திட்டமிட்டும் தெரிந்தே தன்னிச்சையாகவும் மீறியுள்ளமையினாலும்;

(37) பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு நியமிக்கப்படும் நபர் அரசாங்கத் தரப்பு மற்றும் எதிர்க்கட்சி ஆகிய இரு தரப்பு உறுப்பினர்களுக்கும் ஒரே நீதியாகச் செயற்பட வேண்டியுள்ள நிலையில், கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் எப்போதுமே பாராளுமன்றத்தின் அரசாங்கத் தரப்புக்கு விசேட அவதானமும் கவனமும் செலுத்துவது நியாயமான கோணத்திலிருந்து பார்க்கும் போது தெளிவாகப் புலப்படுவதனாலும், குறிப்பாக சிறப்புரிமைப் பிரச்சினைகள், ஒழுங்குப் பிரச்சினைகள் மற்றும் வாய் மூல வினாக்களுக்கான வாய்ப்புகளை வழங்கும் போது எதிர்க்கட்சி உறுப்பினர்களை விட அரசாங்கத் தரப்பு உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்பளிப்பதற்குச் செயற்பட்டமையினால் சபாநாயகர் பதவியின் செயற்பாடுகளை நியாயமாகவும் நடுநிலையாகவும் முன்னெடுக்கும் கோட்பாட்டை மீறியுள்ளமையினாலும்; இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சியின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்ட முறைப்பாடொன்று ஏற்கனவே சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்திலும் (Inter-Parliamentary Union) மற்றும் பொதுநலவாய பாராளுமன்றச் சங்கத்திலும் (Commonwealth Parliamentary Association) கோப்பு செய்யப்பட்டுள்ளமையினாலும்; அம்முறைப்பாட்டிற்கு அமைய, பாராளுமன்றத்தின் மேலாதிக்கத்திற்கு சேதம் விளைவித்தல், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைச் செயன்முறைக்குத் தடை ஏற்படுத்தல் மற்றும் சட்டவாக்க பொறிமுறையை முடக்குதல் ஆகிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளமையினாலும்;

(38) பாராளுமன்றத்தின் மரபுகள் மற்றும் நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக அரசாங்கக் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு சபையில் உரையாற்றுவதற்கு நேரத்தை ஒதுக்கித் தரும்போதும், பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ள குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும்போதும், அனைத்து சந்தர்ப்பங்களிலும் பாராளுமன்ற மரபுகளைப் புறக்கணித்து அரசாங்கக் கட்சிக்கு சாதகமாகவும் பக்கச்சார்பாகவும் செயற்படுகின்றமை நேரடியாகவே புலப்படுகின்றமையினாலும்;

(39) பாராளுமன்றச் சபாபீடத்தினுள் தலைமை தாங்கிச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை அவமதித்தும், கேலி செய்தும், பரிகாசம் செய்தும் அவ்வுறுப்பினர்களின் கௌரவத்திற்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்பட்டு வருகின்றமையினாலும்;

(40) கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் பாதுகாப்புப் பிரதி அமைச்சருமான (ஓய்வுபெற்ற) மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர அவர்கள் இப்பாராளுமன்றத்தின் மீதான நம்பிக்கையைச் சீர்குலைத்துள்ளார் என எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினால் முறைப்படி கையொப்பமிட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கம் செய்வதற்கும் விவாதத்திற்கு வாய்ப்பளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்காமையின் மூலம் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பொதுநலவாயப் பாராளுமன்றப் பாரம்பரியங்களை மீறுவதற்குச் செயற்பட்டுள்ளமையினாலும்; இது தொடர்பில் ஒன்றையொன்று முரண்படும் சபாநாயகர் தீர்ப்புகள் இரண்டை வழங்கி, ஒரே விடயம் தொடர்பில் இரு தீர்ப்புக்களை வெளியிடும் பாராளுமன்ற மரபுகளை மீறி, குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏதுவின்றியே நிராகரித்தமையின் ஊடாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நேரடியாகவே துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கு உள்ளான பாதுகாப்பு பிரதி அமைச்சரைப் பாதுகாப்பதற்குத் துணைபுரிந்துள்ளமையினாலும்;

(41) மேலுள்ள (40) விடயம் தொடர்பில் செயலாளர் குழாமினால் வழங்கப்பட்ட அறிக்கையை எதிர்க்கட்சியினர் கோரியபோதிலும் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் ஊடாக, சபாநாயகரின் தொழிற்பாட்டின் வெளிப்படைத்தன்மை குறித்த நம்பிக்கை சீர்குலைந்துள்ளமையினாலும்; இதன் காரணமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதியை எதிர்பார்க்கும் பாதிக்கப்பட்ட மக்கள் பாராளுமன்றத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையைச் சிதைத்து, பாராளுமன்றத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளமையினாலும்;

(42) நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமிக்குமாறு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் களினால் முறைப்படி கையொப்பமிட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கம் செய்வதற்கும் விவாதத்திற்கு வாய்ப்பளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்காமையின் மூலம் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பொதுநலவாய பாராளுமன்றப் பாரம்பரியங்களை மீறுவதற்குச் செயற்பட்டுள்ளமையினாலும்;

(43) இலங்கையில் COVID-19 நோயினால் மரணமடைந்தவர்களின் சடலங்கள், பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகள் மற்றும் பாதுகாப்பான நடைமுறைகள், கலாசார விழுமியங்கள் மற்றும் மதச் சுதந்திரத்திற்கு முரணான வகையில் அகற்றப்பட்டமை தொடர்பான விடயங்களை விசாரணை செய்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமிக்குமாறு எதிர்க்கட்சியைச் சேர்ந்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் 21 பேரால் கையொப்பமிடப்பட்டு 2026.08.18 அன்று சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் மூலம் கோரப்பட்டிருந்த போதிலும், கௌரவ சபாநாயகர் அவர்கள் இதுவரை குறித்த விசேட குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்காததாலும்;

(44) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர அவர்களினால் கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களின் மேற்கூறப்பட்ட நடத்தை தொடர்பாக 2026 செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி கையளிக்கப்பட்ட சிறப்புரிமைப் பிரச்சினையை பாராளுமன்றத்தில் எழுப்புவதற்கு இடமளிக்காமல், அச்சிறப்புரிமைப் பிரச்சினை தொடர்பாகத் தான் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகச் சபைக்கு அறிவித்து, இயற்கை நீதிக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள "ஒருவர் தனது சொந்த வழக்கை தானே விசாரிக்க முடியாது" (Nemo judex in causa sua) எனும் கோட்பாட்டை மீறிச் செயற்பட்டுள்ளமையினாலும்;

(45) அரசியலமைப்பின் 4(இ) உறுப்புரையின்படி மக்களின் நீதிமுறைத் தத்துவமானது, அரசியலமைப்பினால் ஆக்கப்பட்டு நிறுவப்பட்ட அல்லது அரசியலமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது வேறு யாதேனுமொரு சட்டத்தினால் ஆக்கப்பட்டு நிறுவப்பட்ட நீதிமன்றங்கள், நியாயசபைகள் மற்றும் நிறுவனங்களினூடாக பாராளுமன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவ்விடயம் தனது முன்னோடிகளினாலும் மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதனைப் பொருட்படுத்தாமல் மக்களின் இறைமையை நடைமுறைப்படுத்தும் உயரிய நிறுவனமான பாராளுமன்றத்தின் தத்துவங்களையும் சிறப்புரிமைகளையும் சிறுமைப்படுத்துவதற்குச் செயற்பட்டமையின் மூலம் மக்கள் இறைமையை மீறியுள்ளமையினாலும்; நீதித்துறை தொடர்பில் கொண்டுவரப்படும் பிரேரணை களுக்கும் அனைத்து விதமான விசேட குழுக்களுக்குமான சந்தர்ப்பத்தையும் வழங்காது, மக்களின் இறைமையை சட்டவாக்க சபையின் ஊடாக நிறைவேற்றிக் கொள்வதற்கு மக்களுக்கு உள்ள உரிமையைத் தடுத்துள்ளமையினாலும்;

(46) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு அமைவாக உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கௌரவ நீதிபதிகளை நியமித்தல் நீண்ட காலமாக தாமதிப்பதாக கூறப்படும் விடயம் தொடர்பாக தேவையான பரிந்துரைகளை கௌரவ சனாதிபதி அவர்கள் அரசியலமைப்புப் பேரவையின் தவிசாளர் என்ற ரீதியில் சபாநாயகருக்கு வழங்காமையினால், அப்பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காமையின் காரணமாக எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ உறுப்பினர்களால் 2026.06.12 ஆம் திகதி சபாநாயகரும் அரசியலமைப்புப் பேரவையின் தவிசாளருமான கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்களிடம் கையளிக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமையினால், அவர் அரசியலமைப்பு மற்றும் நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் தன்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகளைத் திட்டமிட்டு தெரிந்தே தட்டிக் கழித்துள்ளமையினாலும்;

(47) நீதித்துறை முறைமையில் தேங்கிக் கிடக்கும் வழக்கு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கும், சிறைச்சாலை நெரிசலைக் குறைப்பதற்கும் தேவையான யோசனைகள் மற்றும் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும் நோக்கில், நிலையியற் கட்டளைகள் 100– 110 இன் பிரகாரம் பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமிக்குமாறு கோரி 2026.08.04 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சியின் கௌரவ உறுப்பினர்கள் 18 பேரினால் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையொன்று தொடர்பாகத் தேவையான பாராளுமன்ற நடவடிக்கைகளை எடுப்பது குறித்து கௌரவ சபாநாயகருக்குரிய பொறுப்பு சரிவர நிறைவேற்றப்படாமையினால், எதிர்க்கட்சியின் கௌரவ உறுப்பினர்கள் பாராளுமன்றத்தினுள் தமது சட்டவாக்கப் பணிப்பொறுப்புக்களை, முக்கியமாக பொதுமக்களின் பிரச்சினைகளைப் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பித்து அவற்றுக்கான தீர்வுகளைத் தேடும் பணியைப் பயனுள்ள முறையில் நிறைவேற்றுவதற்குத் தடை ஏற்பட்டுள்ளமையினாலும்; இவ்வாறானதொரு நிலைமை பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுரிமை, விவாதித்தல் மற்றும் பாராளுமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ஆகிய சிறப்புரிமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் நிலைமையாக அமைவதுடன், இது 1953 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் I ஆம் பகுதியின் 3 ஆம் பிரிவின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சிறப்புரிமைகளுக்குரிய விடயமாக அமைவதனாலும்; அத்துடன், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் முறையாகச் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை ஒன்று தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை நிலையியற் கட்டளைகளின் நோக்கம் மற்றும் செயற்பாடு தொடர்பிலும் சிக்கல் நிலையைத் தோற்றுவிப்பதனாலும், இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் அட்டவணையின் 'ஆ' பகுதியின் 1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்றத்தின் ஏதேனுமொரு கட்டளைக்குக் கீழ்ப்படியாமை என்பதாக அமைவதனாலும்;

(48) சொல்லப்பட்ட விசேட குழுவை நியமிப்பதற்கு விரைவான நடவடிக்கைகளை எடுக்காமை உட்பட, 03 விசேட குழுக்களை நியமிப்பதை தாமதப்படுத்துவதன் மூலம் அல்லது நிராகரிப்பதன் மூலம், பாராளுமன்றத்தின் மேற்பார்வை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் பிரதான முறைகளில் ஒன்றான விசேட குழு முறைமையை முடக்கி, அந்த மேற்பார்வை அதிகாரத்தை பலவீனப்படுத்தியமையினாலும்;

(49) சொல்லப்பட்ட விசேட குழுவை வழங்காமையினால் தனது சிறப்புரிமை மீறப்பட்டதாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா அவர்களினால் 2026.10.03 ஆம் திகதியிட்டு சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்ட சிறப்புரிமை மீறப்பட்டமை தர்க்க ரீதியற்ற மற்றும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத காரணங்களைக் குறிப்பிட்டு, நியாயமற்ற தற்றுணிபு அதிகாரம் சபாநாயகருக்கு இருப்பதாக உரிமைகோரி, சபாநாயகர் தீர்ப்பொன்றை வெளியிட்டு அந்த சிறப்புரிமை பிரச்சினையை நிராகரித்தமையினாலும்; அத்தகைய சபாநாயகர் தீர்ப்புக்களின் மூலம் சபாநாயகரின் தீர்ப்பொன்றில் இருக்க வேண்டிய உன்னதத் தன்மையை இல்லாமலாக்கியமையினாலும்; அத்தகைய தீர்மானங்களின் மூலம் தனது பதவியின் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என்பது முதல்தோற்ற நிலையில் தெளிவாகத் தெரிவதனாலும்;

(50) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா அவர்களுக்கு 2025 மார்ச் 19 முதல் மே 09 வரை பாராளுமன்றத்தில் பேசுவதற்கு இடமளிக்காமல், அவரது உரைகளை நேரலை ஒளிபரப்பிலிருந்து நீக்கி, சரியான விசாரணையோ அல்லது பதிலளிப்பதற்கான சந்தர்ப்பமோ வழங்காமல் மேற்கொள்ளப்பட்டதாகவும், பின்னர் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவினால் அவர் குற்றமற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்டதன் மூலம் அந்தத் தடையின் அடிப்படை தவறானது என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் இயற்கை நீதி மற்றும் சரியான நடைமுறை மீறப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படுவதனாலும்; உரிய சாட்சிய விசாரணையையோ அல்லது குறைந்தபட்ச கருத்து வினவலையோ கூட மேற்கொள்ளாது, பொய்ச் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு, சுயேச்சைக் குழுவொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாராளுமன்றத்தில் செயற்படுவதற்கான உரிமையையும் கருத்துச் சுதந்திரத்தையும் தடுப்பதற்குத் திட்டமிட்டுச் செயற்பட்டுள்ளமையினாலும்;

இப்பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் தனது பதவியின் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்களினால் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் ஊழல், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கீழ் முன்னெடுக்கப்படும் புலனாய்வுகளுக்குச் செல்வாக்குச் செலுத்தும் வகையில் செயற்பட்டமை மற்றும் நலன்களுக்கிடையிலான முரண்பாடுகள் ஏற்படும் வகையில் செயற்பட்டமை ஆகிய செயல்களின் மூலம் அச்சட்டத்தின் கீழ் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குற்றங்கள் நிரூபணமாகியுள்ளமையினாலும்;

மேலும், மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்களினால் 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பகிரங்க ஆதனத்திற்கெதிரான தவறுகள் சட்டத்தின் கீழ் அரச சொத்துத் துஷ்பிரயோகம், இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் 386 மற்றும் 388 ஆம் பிரிவுகளின் கீழ் வரும் குற்றவியல் முறைகேடான பயன்பாடு மற்றும் குற்றவியல் நம்பிக்கைத் துரோகம் ஆகிய குற்றங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குற்றங்கள் நிரூபணமாகியுள்ளமையினாலும்;

மேலும், தான் புரிந்த ஊழல் மற்றும் மோசடிச் செயல்கள் பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் வெளிப்படுவதைத் தடுப்பதற்காக 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் மற்றும் 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைத் திட்டமிட்டும் தெரிந்தே தன்னிச்சையாக மீறியும் துஷ்பிரயோகம் செய்தும் உள்ளமையினாலும்;

மேலும், 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தினால் 2018 மார்ச் 07 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு, 2018 ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வர வேண்டுமென நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைத் திட்டமிட்டும் தெரிந்தே மீறியுள்ளமையினாலும்;

மேலும், 2026 ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட நிலையியற் கட்டளைகளில் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைத் திட்டமிட்டும் தெரிந்தே பாரதூரமாக மீறும் வகையில் செயற்பட்டுள்ளமையினாலும்;

பாராளுமன்றம் மற்றும் அரசியலமைப்புப் பேரவை ஆகிய உயரிய நிறுவனங்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை சீர்குலையும் வகையில் சபாநாயகர் செயற்பட்டுள்ளமையினாலும்;

சபாநாயகர் சார்புநிலையுடன் செயற்படுவதைத் தெளிவாக வெளிப்படுத்தி, சபாநாயகர் பதவியின் சுதந்திரத்தன்மையையும் கௌரவத்தையும் பாரதூரமாக மீறியுள்ளமையினாலும்;

பக்கசார்பற்ற பாராளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களினதும் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ள சபாநாயகரே உறுப்பினர்களின் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் மீறியுள்ளமையினாலும்;

சபாநாயகர் பதவியின் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றத் தவறியுள்ளமையினாலும்; மற்றும்

எனவே, தற்போதைய சபாநாயகர் நாட்டின் உயரிய நிறுவனமான பாராளுமன்றத்தின் தலைமைத்துவத்தை வகிப்பது ஒழுக்கநெறி ரீதியாகவும் சட்டபூர்வமாகவும் பொருத்தமற்றது என்பதாலும்;

கௌரவ சபாநாயகர் (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன அவர்கள் மீது மேற்கொண்டும் நம்பிக்கை இல்லை என இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக.